பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 208

திங்கட்கிழமை
23 ஜுன் 2025

ஆனி 09 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

**எம்.பி.க்களின் பாதுகாப்பு; ஜனாதிபதி இறுக்கம்!**

விரிவு பக்:- 02

## கல்லுண்டாய் குப்பைமேடு தானாகவே எரிகின்றதாம்!

மாநகரசபை விளக்கம்

விரிவு பக்கம்:- 04

## நாடாளுமன்ற ஊழியர்களின் உணவுக்கட்டணங்கள் குறைப்பு

விரிவு பக்கம்:- 03

செம்மணிப் புதைகுழிக்கு நீதிகோரும்

# ‘அணையா விளக்குக்கு’ அனைவரும் பேராதரவு!

ஒற்றுமையாக அணிதிரள அழைப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 23

யாழ்ப்பாணம் அரியாலை சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியின் உண்மை கண்டறியப்பட்டு நீதி நிலைநாட் டப்படவேண்டும் என்று வலியுறுத்தி இன்று ஆரம்பமாகவுள்ள ‘அணையா விளக்கு’ மூன்று நாள் கவனவீர்ப்புப் போராட் டத்துக்குப் பல தரப்புகளும் ஆதரவு தெரிவித்துள்ளன. 11

## இந்தியாவுக்குத் தப்பியோடிய குற்றவாளிகள் கடலில் கைது

மன்னார், ஜுன் 23



தலைமன்னாரில் இருந்து படகுமூலம் இந்தியாவுக்குத்தப்பிச்செல்ல முயன்ற மூவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் யாழ்ப் பாணம், கோப்பாய், பருத் தித்துறை, அச்சுவேலி 11

## சாவகச்சேரி பிரதேசசபை சைக்கிள் வசமாக வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 23

சாவகச்சேரி பிரதேசசபைக் கான தவிசாளர், உபதவி சாளர் தெரிவு இன்று நடை பெறவுள்ள நிலையில், தமிழ் தேசியப் பேரவை சபையின் ஆட்சியைக் கைப்பற்றும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

சாவகச்சேரி பிரதேசசபைக் 11

## இன்று வருகிறார் வோல்கர் டேர்க்!

9 ஆண்டுகளின் பின்னர் இலங்கை வரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர்

கொழும்பு, ஜுன் 23

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க் இன்று இலங்கை வரவுள்ளார். அவரது வருகையை இலங்கை வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

எதிர்வரும் 26ஆம் திகதிவரை வோல் கர் டேர்க் இலங்கையில் தங்கவுள்ளார். அவர் 11



## வோல்கர் டேர்க் நடமாட எவ்வித கட்டுப்பாடுமில்லை!

இலங்கை அரசாங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 23

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வோல்கர் டேர்க் செம்மணி மனிதப்புதைகுழியை பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித் துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அந்த பகுதிக்குச் செல்வதற்கும், மக்களை சந்திப்பதற்கும் தடைகள் ஏற்படுத் 10



முச்சந்தி முரளி

‘ஆக்கள் மட்டுமில்ல இப்ப காத்தும் பேய் மாதிரித்தான் வருகுது கண்டியளோ’

## காணி விடுவிப்புக்காக 2 ஆம் நாளாகவும் போர்

யாழ்ப்பாணம், ஜுன் 23

வலிகாமம் வடக்கில் உள்ள 2 ஆயி ரத்து 400 ஏக்கர் மக்கள் காணி களை விடுவிக்கக்கோரி மயிலிட்டி யில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

நேற்றுமுன்தினம் மயிலிட்டிச் சந்தி யில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் எதிர் 11

## யாழ்ப்பாணத்தில் நேற்று பேய்க்காற்றுடன் மழை!

யாழ்ப்பாணம், ஜுன் 23

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று மாலை கடும் காற் றுடன்கூடிய மழைவீழ்ச்சி பதிவாகியது. மாலை 6.30 மணி தொடக்கம் சில மணிநேரம் பெய்த மழையால் பல இடங்களில் மின்தடையும் ஏற்பட்டது.

திடீரெனப் பலத்த காற்றுடன் பெய்த கடும் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கைப் 10

# ஈரான் அணு உலைகளில் அமெரிக்கா தாக்குதல்

மூளுமா மூன்றாம் உலகப்போர்?

தெஹ்ரோன், ஜுன் 23

ஈரானின் அணு உலைகள் மீது நேற்று அதிகாலை அமெரிக்கா தொடர் தாக்குதல்களை நடத்தி யுள்ளது. இந்தத் தாக்குதல்கள் காரணமாக, மூன்றாம் உலகப் போர் ஏற்படும் அச்சம் தோற்றம் பெற்றுள்ளது என்று சர்வதேச அமைப்புகள் பலவும் கவலை தெரிவித்துள்ளன.

ஈரானின் போர்டோ, நடான்ஸ் மற்றும் 11

## கிணற்றில் பெண்ணின் சடலம்

யாழ்ப்பாணம், ஜுன் 23

வசாவிளானில் தோட்டக்கிணறு ஒன்றில் இருந்து குடும்பப் பெண் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

சுதந்திரபுரத்தைச் 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 22.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4110 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 29 54 64 67 |
| விசேட எழுத்து | L |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 22.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1177 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 19 42 46 51 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 22.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0136 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 2 1 4 6 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 22.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2216 |
| ஆங்கில எழுத்து | Y |
| சுப்பர் இலக்கம் | 20 |
| வெற்றி இலக்கங்கள் | 42 53 68 71 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 22.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5868 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 4 1 4 8 0 6 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 22.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1898 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 55 66 80 81 |
| விசேட எழுத்து | L |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 22.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0443 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 2 2 6 1 |

WORLD BANK

உலக வங்கியால்

# தரமான வலுசக்தி உற்பத்திக்கு 150 மில்லியன் டொலர்

**கொழும்பு, ஜூன் 23**

**இலங்கையில் தூய, தரமான, குறைந்த செலவிலான வலுசக்தி உற்பத்தி செயற்றிட்டத்தை முன்னெடுப்பதற்காக 150 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்குவதற்கு உலக வங்கிக் குழுமம் ஒப்புதல் அளித்துள்ளது.**

இந்தச் செயற்றிட்டத்தின் ஊடாக இலங்கையினால் குறைந்த செலவில் பாதுகாப்பானதும், நிலைபேறானதுமான வலுசக்தியை உற்பத்திசெய்யமுடியும் எனவும், இது அதிக செலவில் இறக்குமதி செய்யப்படும் புதைபடிவ எரிபொருளில் நாடு தங்கியிருப்பதைக் குறைப்பதற்கும், சோலார் மற்றும் காற்றுமூலமான வலுசக்தி உற்பத்தியை அதிகரிப்பதற்கும் உதவும் எனவும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தின்மூலம் நாடளாவிய ரீதியில் உள்ள குடும்பங்களுக்கும் வணிகங்களுக்கும் குறைந்த விலையில், தீங்கற்ற மின்சாரத்தை விநியோகிக்க முடியும். இந்த இலக்கை யதார்த்தபூர்வமாக அடைந்துகொள்வதை முன்னிறுத்தி இலங்கை அரசாங்கத்துடனும் தனியார்த்துறையினருடனும் இணைந்து பணியாற்றுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம் என மாலைதீவு, நேபாளம் மற்றும் இலங்கைக்கான உலக வங்கியின் பணிப்பாளர் டேவிட் சிஸ்லென் தெரிவித்துள்ளார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 22.06.2025 |
| தினம் | ஞயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0576 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கம் | 0 0 2 1 8 3 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 22.06.2025 |
| தினம் | ஞயிற்றுக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2842 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கம் | 31 41 42 76 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 22.06.2025 |
| தினம் | ஞயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கம் | 19 41 47 77 |
| வெற்றி வாரம் | 5003 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 22.06.2025 |
| தினம் | ஞயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0710 |
| வெற்றி இலக்கம் | 28 39 43 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 22.06.2025 |
| தினம் | ஞயிற்றுக்கிழமை |
| கன்னி | ♍ |
| வெற்றி இலக்கம் | 19 28 49 51 |
| சீட்டிழுப்பு வாரம் | 4554 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 22.06.2025 |
| தினம் | ஞயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | B |
| சுப்பர் இலக்கம் | 15 |
| வெற்றி இலக்கம் | 38 44 71 75 |
| வெற்றி வாரம் | 2018 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 22.06.2025 |
| தினம் | ஞயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கம் | 09 17 21 66 |
| வெற்றி வாரம் | 2668 |

## 6 அரசியல்வாதிகளிடம் ஊழல் விசாரணைகள்

கொழும்பு, ஜூன் 23

பல்பொருள் அங்காடிகளுக்கும் வர்த்தகக் கட்டடங்களுக்கும் ஆடம்பர வீடுகளுக்கும் சொந்தக்காரர்களாகிய முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்ட ஆறு அரசியல்வாதிகளுக்கு எதிராக இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இவர்கள் திடீரென குறுகிய காலத்துக்குள் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான இந்தச் சொத்துகளை ஈட்டியுள்ளமை தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளது.

இவர்களுக்கு எதிராக மக்களிடம் இருந்து கிடைத்த முறைப்பாடுகளுக்கமைய விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-75)

## 2400 வேட்பாளர்கள்மீது பாயும் சட்டநடவடிக்கை

கொழும்பு, ஜூன் 23

தேர்தல் செலவுகளை உரிய நேரத்தில் சமர்ப்பிக்காத 2400 வேட்பாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் அவர்களின் தேர்தல் செலவுகளைச் சமர்ப்பிக்கவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியது.

அவ்வாறு கோரிக்கை விடுத்தும் இன்னும் 2400 வேட்பாளர்கள் செலவு அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவில்லை. இதனால் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு ஆணைக்குழுவின் தலைவர் உத்தரவிட்டுள்ளார். (ச-75)

## சொத்துக்குவிப்பு பொலிஸாரிடமும் விசாரணைகள்

கொழும்பு, ஜூன் 23

சொத்துக்குவிப்புத் தொடர்பில் தற்போது சேவையில் இருக்கும் பொலிஸ் உயர் அதிகாரிகள் இருவருக்கு எதிராக விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களுள் ஒருவர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் என்றும் அடுத்தவர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சொத்துக்குவிப்புத் தொடர்பில் மக்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற அதிகமான முறைப்பாடுகளை அடுத்தே இந்த விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

சொத்துகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் பொலிஸ் பிரிவே இந்த விசாரணையை நடத்திவருகிறது. இவர்கள் கடந்த காலங்களில் அதிகமான சொத்துகளை வாங்கிக் குவித்துள்ளனர் என அந்த முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன. (ச-75)

## நிறைவேற்று அதிகாரம் நீக்கப்படுவது சந்தேகமே!

### முன்னாள் நீதியமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 23

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையைத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நீக்கும் என நான் நம்பவில்லை. அம்முறையைத் தொடரவேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பும்கூட என்று முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் என சந்திரிக்கா அம்மையார் உறுதியளித்தார். அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை. பின்னர் மஹிந்தவும் வாக்குறுதி அளித்தார். அதற்கமைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படவில்லை.

நல்லாட்சிக் காலத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்குரிய அதிகாரங்கள் சில மட்டுப்படுத்தப்பட்டன. அதுவும் எமது அழுத்தங்களால்தான் நடந்தது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஜனாதபதி அநுரகுமார திஸாநாயக்க நீக்குவார் என நான் நம்பவில்லை – என்றார். (ச-44)

## எம்.பி.க்களின் பாதுகாப்பு: ஜனாதிபதி இறுக்கம்!

கொழும்பு, ஜூன் 23

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கும் விடயத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இறுக்கமான நிலைப்பாட்டில் உள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்தியாவசியத் தேவைகள் தவிர எந்தச் சந்தர்ப்பத்திலும் பொலிஸ்பாதுகாப்பு வழங்குவதில்லை என்ற முடிவில் ஜனாதிபதி உள்ளார் என்று ஜனாதிபதி வட்டாரம் தெரிவிக்கிறது. பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் அவர் நடத்திய கூட்டத்தின்போது தனது இந்த நிலைப்பாட்டைத் தெரிவித்தாரெனக் கூறப்படுகின்றது. (ச-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்ற ஊழியர்களின் உணவுக்கட்டணங்கள் குறைப்பு

கொழும்பு, ஜூன் 23

**நாடாளுமன்ற ஊழியர்களின் கோரிக்கைகளைத் தொடர்ந்து, நாடாளுமன்ற ஊழியர்களுக்கு விதிக்கப்படும் உணவுக்கட்டணங்களைத் திருத்தியமைத்து குறைப்பதற்கு சபாநாயகர் தலைமையிலான நாடாளுமன்றக்குழு முடிவுசெய்துள்ளது.**

நாடாளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தின்போது இந்தத் திருத்தம் இறுதிசெய்யப்பட்டது. ஜூலை 1 முதல் நடைமுறைக்குவரும் புதிய முடிவின்படி, நிர்வாக நிலை அதிகாரிகளுக்கு முன்பதாக மாதத்துக்கு 4 ஆயிரம் ரூபா வசூலிக்கப்பட்ட நிலையில் தற்போது 3ஆயிரம் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை நிர்வாகமற்ற ஊழியர்களுக்கு மாதத்துக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவாக வசூலிக்கப்பட்ட நிலையில் தற்போது 2 ஆயிரம் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓட்டுநர்கள், பொலிஸ் அதிகாரிகள், ஜனாதிபதி/பிரதமரின் பாதுகாப்புப் பணியாளர்கள் மற்றும் நாடாளுமன்ற உணவகத்தைப் பயன்படுத்தும் ஊடகவியலாளர்களுக்கான உணவு விலைகள் மாறாமல் இருக்கும். நாடாளுமன்ற ஊழியர்களின் மேல் முறையீடுகளின் அடிப்படையில் விகிதங்கள் மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# ஆபிரிக்கப் பன்றிக்காய்ச்சல் விசேட வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஜூன் 23

நாட்டின் அனைத்துப் பிரதேச செயலகப் பிரிவுகளையும், ஆபிரிக்க பன்றிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட அல்லது ஆபத்துமிக்க பகுதிகளாக அறிவிக்கும் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.


கடந்த 13 ஆம் திகதி முதல் மூன்று மாதங்களுக்கு நடைமுறையில் இருக்கும் வகையில் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் ஹேமாலி கொத்தலாவலாவினால் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, பன்றிகள், பன்றி இறைச்சி மற்றும் பன்றி இறைச்சிப் பொருள்களைப் கொண்டு செல்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. (ச-இ)

# அன்று பஸில் இன்று ரில்வின்

*சம்பிக்க தெரிவிப்பு*

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக விருந்தபோதும் பஸில் ராஜபக்சவே ஆட்சி செய்தார். அதேபோல் இன்று அநுரகுமார திஸாநாக்க ஜனாதிபதியாக உள்ளபோதும் ரில்வின் சில்வாவே ஆட்சி செய்கிறார் என்று முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த அரசு ஆட்சிக்குவந்து 6 மாதங்கள் கடந்துவிட்டன. புதிய முதலீடுகள் இல்லை. புதிய அபிவிருத்திகள் இல்லை. உக்ரைன் - ரஷ்யா போர் காரண மாக எமக்குப் பாதிப்பு ஏற்பட்டது. அதைவிட அதிகமான பாதிப்பு ஈரான் –இஸ்ரேல் போரால் எமக்கு ஏற்படும். இந்தப் போர் முடிவுக்கு வராவிட்டால் எமது நாட்டின் நிலை அவ்வளவுதான். குறுகிய காலத்துக்குள் போர் நிறுத்தப்பட வேண்டும். அன்று கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோதிலும் அவரது குடும்பமே அரசைப் பிடித்தது. பஸில் ராஜபக்ச நாட்டை ஆட்சிசெய்தார். அதுதான் இப்போது அநுரவின் ஆட்சியில் நடக்கிறது. அன்று பஸில் ஆட்சிசெய்தார். இன்று ரில்வின் சில்வா ஆட்சிசெய்கிறார் – என்றார். (ச-இ)



# இலஞ்சம் பெற்ற பொலிஸார் கைது


அம்பாறையில் இலஞ்சம்பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மணல் போக்குவரத்தை எவ்வித இடையூறுமின்றி மேற்கொள்வதற்கு வர்த்தகரொருவரிடம் 25 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாகப் பெற்றமை மற்றும் அதற்கு உடந்தையாக இருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளில் குறித்த இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச–இ)

# சிசுவை வீசிய பெண் கைது

கொழும்பு, ஜூன் 23

புத்தளம் மருத்துவமனையில் பெண்கள் சிகிச்சை பெறும் விடுதியின் குளியலறையில் உள்ள வடிகானிலிருந்து உயிரிழந்த நிலையில் சிசுவொன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் புத்தளம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இளம் யுவதி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். தான் பெற்றெடுத்த தனது குழந்தையையே வீசிவிட்டுச் சென்றதாகப் பொலிஸார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் குறித்த இளம்பெண் தெரிவித்துள்ளார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)



# தருமபுரம் மருத்துவமனைக்கு இளங்குமரன் எம்.பி. விஜயம்

கிளிநொச்சி, ஜூன் 23

கிளிநொச்சி தருமபுரம் மருத்துவமனைக்கு தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் நேற்றுமுன்தினம் சென்று மருத்துவமனையின் தேவைப்பாடுகள் குறித்துக் கேட்டறிந்தார்.

இதன்போது மருத்துவமனைக்கு நாளாந்தம் 300க்கு அதிகமான வெளிநோயாளர்கள் வருகைதருகின்றனர். எனினும் ஒரேயொரு மருத்துவரே தற்பொழுது கடமையாற்றிவருகிறார். இதன் காரணமாக தொடர்ச்சியாக 24 மணி நேரமும் கடமையாற்றவேண்டியுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினருக்கு சுட்டிக்காட்டப்பட்டது. இதற்கு விரைவில் தீர்வுகாணப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவித்தார். (ச-22,13, 27)




## அமுல்பேபியில இருந்து அடிக்குரல் அமைச்சர் வரைக்கும்...!

மீனுக்கு வாலையும் பாம்புக்குத் தலையையும் காட்டுறவிலாங்குமீனைப்பற்றிக்கேள்விப்பட்டிருப்பியள். விலாங்குமீன் ரண்டு தரப்புக்குத்தான் 'நான் உங்கட ஆள்' எண்டு சொல்லிப் பேய்க்காட்டமுடியும். ஆனால் இஞ்ச சிலபேர் ஏழெட்டுத் தரப்புகளுக்கு 'நான் உங்கட விசுவாசி' எண்டு பேய்க்காட்டுறது சிலராலமட்டும்தான் முடியும். அது அவைக்குக் கடவுள் குடுத்த கொடை. அப்பிடியானவைக்குத்தான் இப்ப வாழ்வு. அமுல்பேபி யாழ்ப்பாணத்தில ஆட்டம் காட்டிக்கொண்டிருந்த காலத்தில 'நான் உங்கட ஆள் எண்டதால வீணைக்காரர் என்னைப் பழிவாங்குகினம்' எண்டு சொல்லி ஒருத்தர் ஒட்டினவர். அப்பிடித் தனக்காக இப்பிடியெல்லாம் கஷ்டப்படுறாரே எண்டு அவருக்காக மேலிடத்தில எல்லாம் வாதாடி, பதவியொண்டை எடுத்துக் குடுத்தார் அமுல்பேபி. பிறகு அமுல்பேபியின்ர ஆட்டம் முடிஞ்சு, திரும்ப வீணைக்காரரின்ர கையில அதிகாரம் போட்டுது. அப்பிடியே குத்துக்கரணம் அடிச்சு 'நான் எப்பவும் உங்கட பக்கம்தான். அதாலதான் அமுல்பேபி என்னை அமத்தி வைச்சிருந்தவர்' எண்டு அழுதிருக்கிறார். அவ்வளவுதான். பிறகு அவையின்ர காலத்திலும் அழுகுணி அதிகாரியின்ர கொடிதான் பறந்திருக்குது.

இந்தக் கட்டத்திலதான் எலக்சன் வந்தது. திசைகாட்டிக்காரரின்ர எலக்சன் பரப்புரையளைக் கேட்டதும் சனத்துக்கு ஒரு நம்பிக்கை. 'இனி ஊழல் இருக்காது. அதிகாரத்துஷ்பிரயோகம் இருக்காது. பாலாறும் தேனாறும் பாயப்போகுது. தித்திக்கும் வாழ்க்கை திசைகாட்டியால வரப்போகுது' இப்பிடித்தான் கனபேர் நினைச்சவை. அப்பிடி நேர்மையான ஆட்சியில அரசியல்வாதிமாரின்ர காலைப் பிடிச்சு, கையைப் பிடிச்சு பதவிக்கு வந்தவைக்கு ஆப்புத்தான் எண்டும் சனம் சந்தோசப்பட்டது. ஆனால் அதுவேற வாய், இது நாறவாய் எண்ட கதைமாதிரி மாறிப்போட்டுது திசைகாட்டியின்ர நிலைமை. அவை ஆட்சிக்கு வரமுதல் மற்ற அரசியல்வாதியள் எல்லாரும் உலகத்துக்கே உலைவைக்கிற ஊழல்வாதியள் எண்டும், தாங்கள் மட்டும்தான் சுத்தமான சூசைப்பிள்ளையள் எண்டும் சொல்லிக்கொண்டிருந்தவை. இப்ப என்னடா எண்டால் அவையளும் முந்தின அதே ஊழல் அரசியல்வாதிமார் போலதான் நடக்கினமாம். இஞ்ச இருந்து கொண்டு அடிக்குரலில நரிக்கதையும், புலிக்கதையும் சொல்லிக்கொண்டிருக்கிற அமைச்சருக்கு எங்கையாவது பெரிய ஹொட்டலில கொண்டுபோய் பார்ட்டி வைச்சுப் பதவியைத் தக்கவைச்சிட்டாராம் அந்த அழுகுணி அதிகாரி. இப்பிடி விருந்துக்கும், மருந்துக்கும் மடங்கிறவை எண்டால் எதுக்கு வெள்ளையும் சொள்ளையுமா 'நாங்கள் ஊழலை ஒழிப்போம்'எண்டு உந்தத் திசைகாட்டிக்காரர் சொல்லுகினம் எண்டது விளங்கேலை.

இவையளும் ஊழல்காரருக்குத்தான் காவடி எடுக்கினம் எண்டு தெரிஞ்சதால, இவ்வளவுகாலமும் திசைகாட்டிக்குத் தீயா வேலைசெய்த கனபேர் அரசியலே வெறுத்துப்போய், ஒதுங்கத் தொடங்கிட்டினமாம். எல்லாரும் மேல்மட்டங்களோட யாழ்ப்பாணத்தில திசைகாட்டி பிழையான பாதையைக் காட்டுது எண்டு சொல்லி ஒரே புலம்பலாம். அடிக்குரல் அமைச்சரைப் பற்றித்தான் நிறைய முறைப்பாடாம். அநேகமா கெதியில யாழ்ப்பாணத்தில திசைகாட்டியில மாற்றங்கள் வரலாம் எண்டும் சொல்லுப்படுகுது. யானை மட்டும்தான் தன்ர தலையில தானே மண்போடும் எண்டில்லை, திசைகாட்டியும் போடும். அதைத்தான் இப்ப பாக்கிறம் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தாய்வழி உறவில் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்புத் தருவார். அவர்மூலம் உங்களுக்குத் தேவையான உதவிகளும் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** சகோதரர்கள் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். மாலையில் உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய டிசைனில் ஆடைகள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும். உடல் ஆரோக்கியம் மேம்படும். நண்பர்கள் உதவிகேட்டு வருவார்கள்.

**மிதுனம்:** திடீர்ச்செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகளுக்காக செலவுசெய்யவேண்டிவரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் வருகை மகிழ்ச்சிதரும்.

**கடகம்:** மனதில் இனந்தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். உடல்நலனில் கவனம் தேவை. உங்கள் தேவையை அறிந்து மற்றவர்கள் உதவிசெய்வார்கள்.

**சிம்மம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தைவழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்கு பணியின் காரணமாக வெளியூர்ப்பயணம் மேற்கொள்ள நேரிடும்.

**கன்னி:** நிதானத்துடன் செயற்படவேண்டிய நாள். மற்றவர்களுடன் பேசும்போது வீண்மனவருத்தம் ஏற்படும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வாழ்க்கைத்துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். சகோதரர்களால் அனுகூலம் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**துலாம்:** புதியமுயற்சிகள் சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிள்ளைகளால் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். சிலருக்குக் குடும்பம் தொடர்பான வேலையை முன்னிட்டு வெளியூர்ப் பயணம் மேற்கொள்ளநேரிடும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். தாயின் உடல்நலனில்கவனம்தேவை. சிலருக்கு சிறிய அளவில் ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டு சரியாகும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் கைக்கு வந்துசேரும். முக்கிய பிரமுகர்களின் அறிமுகம் கிடைப்பதுடன், அவர்களால் ஆதாயமும் கிடைக்கும். நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள்

**மகரம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு திடீர்ப்பண வரவுக்கும், திடீர்ச்செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. குடும்பவிஷயமாகசிலருக்குவெளியூர்ப் பயணம் மேற்கொள்ளநேரும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாகமுடியும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும். வீண் அபவாதம் ஏற்படக்கூடும்.

**மீனம்:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும். எதிர்பாராத பணவரவும், திடீர்ச்செலவுகளும் ஏற்படக்கூடும். ஆனால், புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

# கல்லுண்டாய் குப்பைமேடு தானாகவே எரிகின்றதாம்!

## மாநகரசபை விளக்கம்

**யாழ்ப்பாணம், ஜூன் 23**

**கல்லுண்டாய் வெளியில் அமைந்துள்ள குப்பைமேடுகளில் மெதேன் வாயு உருவாகி குப்பைமேடு தானாகவே எரிகின்றது. இல்லையாயின் விஷமிகளால் தீமூட்டப்படுகின்றது என்று யாழ்.மாநகரசபை தெரிவித்துள்ளதாக அபயம் முறைப்பாட்டு சேவை தெரிவித்துள்ளது.**

கல்லுண்டாய் பகுதியிலுள்ள குப்பைமேடு நேற்றுமுன்தினமும் எரியூட்டப்பட்ட நிலையில் குறித்த வீதி புகைமண்டலமாகக் காணப்பட்டது. குறித்த கழிவு சேகரிக்கும் பகுதிக்குத் தொடர்ச்சியாக தீ வைத்து வருவதால் வீதியால் செல்லும் பயணிகளும், அண்டியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களும் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கிவருகின்றனர். மாநகரசபையின் இந்தச் செயற்பாடுகள் குறித்து பல தடவைகள் செய்திகள் பிரசுரிக்கப்பட்ட போதும் தொடர்ந்தும் குறித்த செயற்பாடு இடம்பெறுவதாக மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் எரியூட்டப்பட்டமை தொடர்பில் வடமாகாண அபயம் முறைப்பாட்டு சேவைக்கு மக்களால் முறையிடப்பட்ட நிலையில் இதுதொடர்பில் மாநகரசபையினிடம் வினவியபோதே, குப்பைமேடுகளால் மெதேன் வாயு உருவாகி குப்பைமேடு தானாக எரிகிறது. இல்லையெனில் விஷமிகளால் எரிக்கப்படுகிறது. 25 ஏக்கர் அளவில் உள்ள காணிக்கு போதிய பாதுகாப்பு ஊழியர்கள் இல்லாமையும் இதற்குக் காரணம். மாநகரசபையின் தீயணைப்பு பிரிவின்மூலம் கட்டுப்படுத்த முனைவதாக மாநகரசபை தெரிவித்ததாக முறைப்பாட்டை வழங்கியோருக்கு அபயம் தெரிவித்துள்ளது. (ச-125)

# மோகனதாஸ் சுவாமிக்கு 'தேசாபிமானி' விருது



கொழும்பு, ஜூன் 23

சந்நிதியான் ஆச்சிரமம் முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை அமைப்பினரால் 'தேசாபிமானி' எனும் உயர் விருதும், மனித உரிமைகளுக்கான மாகாண இயக்குநர் எனும் பதவிநிலையும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. கொழும்பு அருங்காட்சியகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ச-22, 66)



### யாழ்.மாவட்டத்துக்கான

# வீதி அபிவிருத்திப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சின் நிதியொதுக்கீட்டில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முதற்கட்ட புனரமைப்புப் பணிகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பமாகின.

காங்கேசன்துறைக் கல்லூரி வீதியின் புனரமைப்புப் பணிகளை முதற்கட்டமாக கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் ஆரம்பித்துவைத்தார். நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவக் கலாநிதி சண்முகநாதன் சிறிபவானந்தராஜா, போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஜீவநாதன், மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வடமாகாணப் பணிப்பாளர் குருஸ், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-27-9)

# முத்துச்சப்பறத்தில் அராலி பேச்சியம்பாள்



யாழ்ப்பாணம், ஜூன் 23

அராலி மேற்கு ஸ்ரீ பேச்சியம்பாள் ஆலயத்தின் வருடாந்த அலங்கார வேள்வி உற்சவத்தின் 5ஆம் திருவிழாவான நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அம்பாள் முத்துச் சப்பறத்தில் ஆரோகணித்து அருள்பாலித்தார். கருவறையில் வீற்றிருக்கும் பேச்சியம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள், வசந்த மண்டபப் பூஜைகள் நடைபெற்று பேச்சியம்பாள் முத்துச் சப்பறத்தில் எழுந்தருளினார்.

ஆலயக் கிரியைகளை துஷ்யந்தக்குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் நடத்தினர். ஆலயத் திருவிழாவானது நாளை மறுதினம் புதன்கிழமை வேள்வி உற்சவத்துடன் நிறைவடையவுள்ளது. (ச-41-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உண்மையின் சுடர் அணைவதில்லை!

'செம்மணி' வெளி எங்க தேசத்தின் புதைகுழிகளின் கருவறை. எண்ணற்ற உடல்கள் அந்தச் சதுப்பு வெளிக்குள் புதைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு உடலும் ஓராயிரம் உண்மைகளைச் சொல்லக்கூடியன. அந்த உண்மைகள், மூடப்பட்ட பிராந்தியமாக யாழ்ப்பாணம் இருந்தபோது சிறிலங்காப் படைத்தரப்பின் கையில் சிக்கிய தமிழ்மக்களின் வாழ்வு எவ்வளவுதூரம் சிதிலமாக்கப்பட்டது என்பதை ஆதாரத்துடன் வெளிப்படுத்தக்கூடியவை. பட்டலந்தவில் தன் சொந்த இனத்தின் மீதே மிலேச்சத்தனமான சித்திரவதைகளை மேற்கொண்டு, நூற்றுக்கணக்கானோரைக் கொன்றுகுவித்த, சிறிலங்காவின் ஆட்சிமையம், செம்மணியின் தமிழினம்மீது எப்படியெல்லாம் வெறிகொண்டு வேட்டையாடியிருக்கும் என்பதைச் சொல்லத்தேவையில்லை. கிருசாந்தியின் சாவோடு செம்மணி பற்றிய உண்மைகள் வெளியுலகுக்குத் தெரியவந்தாலும், புதைகுழிகளுக்குள் இருந்து சில எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டிருந்தபோதும், அதைப்பற்றிய முழு உண்மைகளும் வெளிவராமல், எல்லாப்புதைகுழிகளும் தோண்டப்படாமல் அப்படியே அந்த விவகாரத்தை ஆழப்புதைத்துவிட்டது சிறிலங்கா அரசு.

தங்களுக்கு இன்னும் நீதி கிட்டவில்லை என்பதால் மயானத்துக்கு மதில் கட்டத்தோண்டிய அத்திபாரத்தின் வழியே சில எலும்புக்கூடுகள் வெளிப்பட்டதால், மீண்டும் செம்மணி பேசுபொருளாகி, புதிதாக அகழ்வுப்பணிகள் ஆரம்பமாகியிருக்கின்றன. இதன்போதும் எலும்புக்கூடுகள் ஏராளமாக மீட்கப்பட்டுள்ளன. 1999 இல் செம்மணிப் புதைகுழிகள் தோண்டப்பட்டபோது, கிருசாந்தி வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட சோமரத்ன ராஜபக்ச, தன்னால் சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்கள் என்று அடையாளங்காட்டிய சில பகுதிகளில் மாத்திரமே எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டிருந்தன. ஏனைய இடங்களில் சடலங்கள் இருக்கவில்லை. அதிலும் குறிப்பாக அதிகளவான சடலங்கள் போடப்பட்டதாக சோமரத்ன கூறிய கொட்டுக்கிணற்றுப் பிள்ளையார் கோயிலில் உள்ள கிணற்றில் ஒரு சடலம்கூட அகப்படவில்லை. செம்மணி பற்றிய கதையாடல்கள் வெளிவந்து, அந்தப் பகுதி 1999 இல் அகழப்படுவதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் செம்மணியில் இரவிரவாக மின்விளக்குகள் ஒளிரவிடப்பட்டு, இராணுவத்தினரும், அவர்களின் வாகனங்களும் அதிகளவில் அங்கு உலவித்திரிந்ததாக சற்றுத்தள்ளி குடியிருந்த மக்கள் தெரிவித்திருந்தனர். எனவே புதைகுழி அகழப்பட்டால், தம்மால் புதைக்கப்பட்ட சடலங்கள் சிக்கக்கூடாது என்பதற்காக, அவற்றைப் படைத்தரப்பு அப்புறப்படுத்திவிட்டது என்று நம்பப்பட்டது. இப்போது சோமரத்ன ராஜபக்ச அடையாளங்காட்டாத பகுதிகளில் குவியல் குவியலாக எலும்புக்கூடுகள் மீட்கப்படுவது மக்களின் சந்தேகம் உண்மைதான் என நிரூபித்திருக்கிறது.


இந்தநிலையில் செம்மணியில் நிலத்தின்கீழ், தமக்கான நீதிக்காக ஏங்கிக்கொண்டிருக்கும் ஆன்மாக்களின் அவாவைத் தீர்க்கவேண்டிய காலக்கடமை நமக்கிருக்கிறது. செம்மணியில் புதைந்துகிடக்கும் உண்மை முழுதுமாக வெளிக்கொணரப்படவேண்டும். படைச்சிப்பாய்கள் தொடக்கம் அவர்களுக்கு ஆதரவாக இருந்த ஆட்சியாளர்கள் வரை சகல குற்றவாளிகளும் சட்டத்தின்முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படவேண்டும். செம்மணி ஆன்மாக்களுக்கான நீதிக்கான யாகத்தின் ஓர் அங்கமாக, மக்கள் செயல் என்ற அமைப்பால் இன்று தொடக்கம் 25 ஆம் திகதி வரையான மூன்று நாள்களுக்கு 'அணையா விளக்கு போராட்டம்' நடத்தப்படவுள்ளது. இந்தப் போராட்டத்தில் பெருந்திரளாக மக்கள் கலந்துகொண்டு, அணையாவிளக்கை பெருஞ்சுடராக மாற்றவேண்டும். அந்தச் சுடரில் பொய்மை பொசுங்கி, புதைக்கப்பட்ட உண்மைகள் வெளிவரட்டும். நிலத்துக்குள் உறங்கும் ஆன்மாக்களுக்கு அந்தச் சுடர் நீதியை வழங்கட்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

உங்களிடம் கற்றுக்கொள்ளும் மனம் இருந்தால்
நீங்கள் முட்டாள்களிடமிருந்துகூட பாடம் கற்கமுடியும்;
அந்த மனம் இல்லாவிட்டால் உங்களால் புத்தனிடமிருந்துகூட
எதையும் கற்கமுடியாது.

—ஓஷோ —




# ஆசிரியர் பற்றாக்குறைக்குத் தீர்வாக டிஜிற்றல் கற்றல்!



கல்வியமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜுன் 23**

**தற்போதுள்ள ஆசிரியர் பற்றாக்குறைக்குத் தீர்வாக, தற்போதுள்ள வளங்களைத் திறம்பட பயன்படுத்திக் கற்றல் இடைவெளியைக் குறைப்பதற்காக அடுத்த ஆறு மாதங்களுக்குள் டிஜிற்றல் கற்றல் முறைமைகளை அறிமுகப்படுத்துவதில் விசேட கவனம் செலுத்தப்படவேண்டும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

டிஜிற்றல் கல்விநிலை மாற்றத்தை மேற்பார்வையிட அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பணிக்குழுவுடன் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் தற்போது உள்ள 42 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர் பற்றாக்குறை அவசரமாக தீர்க்கப்படவேண்டும். சகல பாடசாலைகளிலும் மனித மற்றும் பௌதிக வளங்களின் நியாயமான விநியோகத்தை உறுதிசெய்யும் அதேவேளை டிஜிற்றல் கற்றல் முறைமைகள் அறிமுகப்படுத்தப்படவேண்டும்

இந்த இலக்கை அடைவதற்கு வலுவான, பல்துறைப் பணிக்குழு அவசியம் - என்றார். (ச-26)

# பதுளை பஸ் விபத்து; விசாரணை ஆரம்பம்

பதுளை, ஜுன் 23

பதுளை - மஹியங்கனை பிரதான வீதியில், துன்ஹிந்த நான்காவது மைல்கல் பகுதியில் நேற்றுமுன்தினம் பேருந்து ஒன்று வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பில் விசாரணைகள் பதுளை போக்குவரத்துப்பிரிவின் பணிப்பாளரின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறித்த பேருந்து விபத்தில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதுடன், 31 பேர் காயமடைந்துள்ளனர். (ச-இ)



# வாகன இலக்கத்தகடு அச்சிடுவதில் தாமதம்!

கொழும்பு, ஜுன் 23

வாகன இலக்கத்தகடுகளை அச்சிடுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக சுமார் 15 ஆயிரம் வாகனங்களின் இலக்கத்தகடுகளை அச்சிடுவதற்காக காத்திருப்பதாக மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

அச்சிடும் நிறுவனத்துக்கு பணம் செலுத்துவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இலக்கத்தகடுகளை அச்சிடும் பணிகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இலக்கத்தகடுகளை அச்சிடுவதற்குப் புதிய நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான செயற்பாடு தொடங்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# உள்நாட்டுத் துப்பாக்கியுடன் ஒருவர் கைது

அரலகங்விலப் பொலிஸ் பிரிவின் வெஹெரகம வெலியாய பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில், உள்நாட்டுத் துப்பாக்கியை வைத்திருந்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் அரலகங்விலப் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது. (ச-இ)

# குளவி கொட்டியதில் 50 மாணவர்கள் பாதிப்பு

கொழும்பு, ஜுன் 23

அறநெறிப்பாடசாலையைச் சேர்ந்த சுமார் 50 மாணவர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை குளவிக்கொட்டுக்கு உள்ளாகியுள்ளனர்.

மித்தெனிய பகுதியிலுள்ள ஒரு விகாரையில் நடத்தப்படும் அறநெறிப் பாடசாலைக்குச் சென்ற மாணவர்களே இவ்வாறு குளவிக் கொட்டுக்கு உள்ளாகியுள்ளனர்.

குளவிகளால் தாக்கப்பட்ட மாணவர்கள் சிகிச்சைக்காக மித்தெனிய, கட்டுவன, காரியதித்த மற்றும் எம்பிலிப்பிட்டிய மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

நாளை

செவ்வாய்க்கிழமை - ஆனி 10

24.06.2025

சுபநேரம் : 10.25- 11.55

ராகுகாலம் : 02.55-04.25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி ஆதரவு




**கொழும்பு, ஜூன் 23**

**அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கு தங்களின் முழு ஆதரவும் கிடைக்கும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.**

ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகளுக்கும் பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

கலந்துரையாடலின்போது, புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்காக ஏற்கனவே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பாடசாலைக் கல்வியில் வரும் ஆண்டுக்கான புதிய சீர்திருத்தங்களின் செயற்படுத்தல் மற்றும் அதில் உள்ள சம்பந்தப்பட்ட சவால்கள் குறித்து ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகளிடம் பிரதமர் எடுத்துரைத்தார்.

புதிய பாடத்திட்டத்தின் தயாரிப்பு, கல்வித் துறையில் மனிதவள வளர்ச்சி, உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பொதுக்கல்வி, தொழிற்பயிற்சி, உயர்கல்வி மற்றும் ஆரம்பகால குழந்தைப் பருவ வளர்ச்சியில் முன்னெடுப்புகள் தொடர்பான அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் பிரதமர் விரிவாகக் குறிப்பிட்டார்.

இதன்போது ஆசிரியர் பயிற்சி, உட்கட்டமைப்பு மேம்பாடுகள் மற்றும் டிஜிற்றல் தொழில்நுட்ப முன்னேற்றம் உள்ளிட்ட கல்வித்துறையின் வளர்ச்சிக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்குவதற்கான தங்களின் உறுதிப்பாட்டை ஆசிய அபிவிருத்தி வங்கியினர் உறுதிப்படுத்தினர். (ச-26)

## போலி அறிவிப்பு பொலிஸார் மறுப்பு!




கொழும்பு, ஜூன் 23

மதுபோதையில் வாகனம் ஓட்டுபவர்களுக்கு ரூ. 5 லட்சம் அபராதம் அல்லது 2 வருட சிறைத்தண்டனை விதிக்கப்படும் என சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் செய்தி உண்மைக்குப் புறம்பானது என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து பொலிஸ் தமது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்ட அறிக்கையில், இத்தகைய கூற்றுக்கு எந்தச் சட்ட அடிப்படையும் இல்லை என்றும், இது முற்றிலும் பொய்யானது என்றும் தெளிவுபடுத்தியுள்ளது.

தவறான தகவல்களைப் பரப்புவோருக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்துள்ளது. (ச-28)



## மாடு இறைச்சியாக்கும் பகுதியில் வவு.பிரதி மேயர் கண்காணிப்பு

வவுனியா, ஜூன் 23

வவுனியா மாநகரசபைக்குரிய மாடு வெட்டும் இடத்தில் சுகாதாரச்சீர்கேடுகள் நிலவுவதாகக் கிடைத்த தகவலையடுத்து மாநகர துணைமுதல்வர் பரமேஸ்வரன் கார்த்தீபன் அதனை நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது குறித்த இடத்தில் நிலவும் சுகாதாரச்சீர்கேடுகளை உடன் நிவர்த்திசெய்யுமாறு உத்தரவு பிறப்பித்ததுடன் அங்கு தினசரி வெட்டப்படும் மாடுகளின் விவரம் மற்றும் வெளிமாவட்டத்துக்கு ஏற்றப்படும் மாடுகளின் விவரங்களைக் கேட்டறிந்துகொண்டார். (ச-22,18)

## காப்பெற் வீதியாகும் வவு.பூந்தோட்டம் வீதி

வவுனியா, ஜூன் 23

வவுனியா பூந்தோட்டம் லயன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இருந்து பெரியார்குளம் முருகன் ஆலயம் வரையான ஆயிரத்து 200 மீற்றர் நீளம் கொண்ட வீதிக்குக் காப்பெற் இடும் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிராமப்புற வீதிகளைப் புனரமைக்கும் திட்டத்தின்கீழ் குறித்த வீதிக்கு 11 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளன.

மாநகரசபையின் வட்டார உறுப்பினர் சி. கிருஸ்ணதாசின் கோரிக்கைக்கு அமைய நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரனின் ஒழுங்குபடுத்தலில் இந்த வீதிப் புனரமைப்பு செய்யப்படுகின்றது. (ச-110)

## பஸ் விபத்து மூவர் பலி !

அநுராதபுரம், ஜூன் 23

அநுராதபுரம், தம்புத்தேகமப் பிரதேசத்தில் இருந்து பதுளை பகுதிக்கு சுற்றுலாப்பயணிகளை ஏற்றிவந்த தனியார் பேருந்து நேற்றுமுன்தினம் புரண்டு விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் 35 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகி பதுளை போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர்களில் மூவரே சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-22)

## தெல்லிப்பழைப் பிரிவில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பாடசாலைகளை விடுவிக்குக

யாழ்ப்பாணம், ஜூன் 23

தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவில் மீள் குடியமர அனுமதிக்கப்படாத பிரதேசத்தில் காணப்படும் பாடசாலைகளை விடுவிக்கவேண்டும் என்று பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற தெல்லிப்பழைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மீள்குடியமர அனுமதிக்கப்படாத பிரதேசத்தில் 4 பாடசாலைகளும் தற்காலிகமாக இயங்கும் மூன்று பாடசாலைகளும் காணப்படுகின்ற நிலையில் அவை குறித்து தெல்லிப்பழைப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இதன்போது தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவில் மீள்குடியமர அனுமதிக்கப்படாத பிரதேசத்தில் உள்ள இயங்காத நிலையில் உள்ள பாடசாலைகளாக பலாலி சித்தி விநாயகர் வித்தியாலயம், காங்கேசன்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, காங்கேசன்துறை சிங்கள மகாவித்தியாலயம், பலாலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை என்பன காணப்படுகின்றன.

இடம்பெயர்ந்து தற்காலிகமாக வேறு பிரிவில் இயங்கும் பாடசாலைகளின் நிரலில் வசாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம், மயிலிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, காங்கேசன்துறை மகாவித்தியாலயம் என்பன காணப்படுகின்றன என்று தெல்லிப்பழைப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தரவுகளின்மூலம் வெளிப்படுத்தினார்.

இதேவேளை பலாலி சித்தி விநாயகர் வித்தியாலயம் விடுவிக்கப்பட்டுள்ள போதிலும் வேலி அகற்றப்படாமல் இராணுவத்தினரின் பிடியிலேயே உள்ளதாக பிரதேசவாசிகள் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான சந்திரசேகர், விடுவிக்கப்பட்ட காணிகள் இன்னமும் இராணுவத்தின் பிடியில் உள்ள நிலையில் அவற்றின் வேலிகளை அகற்றத் தீர்மானம் எடுப்பதாகவும் ஏனைய பாடசாலைகள்தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும் தெரிவித்தார். (ச-125)

## மின்கம்பத்தை சாய்த்தது டிராக்டர்

யாழ்ப்பாணம், ஜூன் 23



அராலி மத்தி பகுதியில் உழவியந்திரம் ஒன்று நேற்றுமுன்தினம் மின்கம்பத்துடன் மோதியதில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

வீதியால் சென்ற மாடு குறுக்கே பாய்ந்ததால் வேகக்கட்டுப்பாட்டை இழந்த உழவு இயந்திரம் வீதியோரத்தில் இருந்த மின்கம்பத்துடன் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது. விபத்தில் மின்கம்பம் முறிந்து உழவுஇயந்திரத்தின்மீது விழுந்துள்ளது. எனினும் சாரதிக்கு எந்தவித காயங்களும் இன்றி உயிர்தப்பியுள்ளார். விபத்தின்போது சேதம் ஏற்பட்ட மின்சார இணைப்பை வட்டுக்கோட்டை மின்சாரசபையினர் மேற்கொண்டனர். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 33ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18 . 06 . 1949

மறைவு 28 . 06 . 1992

அமரர்
## மாசிலாமணி தேவநேரு
(கிராம சேவகர்)

தங்களை இழந்த பின்
எம் வாழ்வில்
வரும் ஒவ்வொரு நிமிடமும்
முட் பாதைகளே அப்பா!

செட்டிவளவு லேன்,
இணுவில் மேற்கு,
இணுவில்.

மனைவி,
பிள்ளைகள்.

## காணி விற்பனைக்கு

சுதுமலை குரங்கிலிப்பான் எனும் இடத்தில் 4 பரப்பு, 5.25 குளியில் அமைந்த காணி விற்பனைக்குண்டு.

076 026 8540

(CS/58687) D*

## நீங்கா நினைவலைகள்

அமரர் சந்திரராசா விதுஜாம்பாள்



மலர்வு 04.09.1995

உதிர்வு 21.05.2025

மௌனமாய் நின்ற நாள் நினைவில்,
மனதைக் கலையும் வார்த்தையில்லை...
புன்னகையாய் விட்டுச் சென்றீர்,
புதுமனம் வெறுமையாகி விட்டதே!

அழகான சொற்கள் பேசினீர்,
அன்பு நிறைந்த பார்வை கொடுத்தீர்,
இப்பொழுது உங்கள் நினைவுகள் தான்
எங்கள் வாழ்வில் ஒளியாக
நிறைந்திருக்கும்.

நீங்கள் இல்லா காலங்களிலும்,
உங்கள் நிழல் நம்மை சேரும்...
ஒவ்வொரு நிமிடமும் உங்கள் நினைவுகள்
உற்சாகத்தையும், ஆறுதலையும் தரும்.

நீங்கள் மறைந்தாலும் நினைவில் நின்றீர்,
நமது உள்ளத்தில் நிலையான ஒளி...
அமைதியாய் ஓய்ந்த உங்கள் ஆன்மா,
எல்லைதாண்டி எம்மோடு வாழும்!

துர்க்காபுரம்
மல்லாகம்

குடும்பத்தினர்.
077 959 0729

## பசுமை அமைதி விருதுகள் வழங்கும் நிகழ்வு

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் நடத்தும் பசுமை அமைதி விருதுகள்–2024 பரிசளிப்பு விழா எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியாப் பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தர் பேராசிரியர் யோ.நந்தகோபன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி.சுகந்தினி செந்தில்குமரன், வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் எந்திரி ச.சர்வராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச–41–66)

## மரண அறிவித்தல்

பிறப்பு 24 . 12 . 1949

இறப்பு 20 . 06 . 2025



### இராசதுரை கசில்டா ஒலின்ரீனா (வவா)

யாழ்ப்பாணம் பாங்ஷால் வீதியைப் பிறப்பிடமாகவும், 29/4 மருதடி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை கசில்டா ஒலின்ரீனா (வவா) அவர்கள் கடந்த (20.06.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை (இராசதுரை)-மேரி மார்க்கிரேட் (பூமணி) தம்பதியின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான குஞ்சர்-செல்லாச்சி தம்பதியின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற குஞ்சர் இராசதுரை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற லில்லி அக்கினெஸ், செல்வராணி (தேவி), ஆபிரகாம் லிங்கன் (லிங்கன்), ஜோண் ஒவ் ஆர்க் (குஞ்சு), காலஞ்சென்றவர்களான பீற்றர் கெனமன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுதாகரன் (SK Suthas Studio), றொமீலன் (லண்டன்), ஜெகன் (JRK எண்ணெய் அரைக்கும் ஆலை), கொலின்ஸ் (கணனி ஆசிரியர்), றஞ்சித் (MK Studio), வைஷ்ணவி (பிரான்ஸ்), யசோதா (ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தாயாரும், லூட்ஸ் தயாபரி (தனம்), சிசிலியா (கீதா-லண்டன்), மாலினி, மலர்விழி, ராஜ்மோகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தர்மிக்கா, கிருபரன், ஜனனிக்கா, ஜனுசிக்கா, றியான், டியானா, நயனிக்கா, சஜிந், துருவ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (23.06.2025) திங்கட்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் புனித திரேசம்மாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்,
077 967 2038

29/4 மருதடி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 01 . 1967

மறைவு 22 . 06 . 2025



### சுப்பிரமணியம் யோகராணி

சிவகுருலேன் கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் யோகராணி அவர்கள் நேற்று (22.06.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும், பரமநாதன் (நீர்வேலி), மகேஸ்வரி (நீர்வேலி), நகுலேஸ்வரன் (சுவிட்சர்லாந்து), பரமேஸ்வரன் (கொக்குவில் - ஓய்வு பெற்ற ஆசிரியர்), ராஜவதனி (சுவிட்சர்லாந்து) ஆகியோரின் சகோதரியும், ரஞ்சிதமலர், விநாயகமூர்த்தி, சரோஜினி, உமாபதி, தமிழ்ச்செல்வன், ஆகியோரின் மைத்துனியும், மிதுலன், வினோஜினி, சுஜாகன், பிரசன்னா, தீபிகா, துவாரகன், கஜேந்தினி, மகிழ்ந்தினி, ஆகியோரின் அன்பு அத்தையும், அனுசியன், அனுரதன், ஆகியோரின் அன்புச் சித்தியும், மகரன், யதுர்ஷன் ஆகியோரின் அன்பு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2025) திங்கட்கிழமை நண்பகல் 12:00 மணியளவில் நீர்வேலி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்
077 314 6013, 077 263 6449

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(CS/3467) D*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மருத்துவர் பா.சயந்தனின் 3 நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 23

குழந்தை சத்திரசிகிச்சை நிபுணரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான மருத்துவர் பா.சயந்தன் எழுதிய குழந்தை சத்திரசிகிச்சை தொடர்பான மூன்று நூல்கள் யாழ்ப்பாணத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்துக்கென யாழ். நகரில் அமைக்கப்பட்ட மருத்துவப்பயிற்சி மற்றும் ஆராய்ச்சித் தொகுதிக் கட்டடத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை குறித்த நிகழ்வு நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா பிரதம விருந்தினராகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டு நூலை வெளியிட்டுவைத்தனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி மருத்துவர் இ.சுரேந்திரகுமாரன், சத்திரசிகிச்சை நிபுணர் மருத்துவர் எஸ். ரவிராஜ், குழந்தை சத்திரசிகிச்சை நிபுணர்களான மருத்துவர் சஞ்சய அபேயகுணசேகர மற்றும் பி.சஜீவன், மதத் தலைவர்கள், மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், மருத்துவபீட மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-20)

## மரண அறிவித்தல்



தோற்றம் 18 . 01 . 1950

மறைவு 21 . 06 . 2025

### நாகமுத்து நவரத்தினம்

(உரிமையாளர் - நவரத்தினம் தச்சுத்தொழிலகம்)

இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து நவரத்தினம் அவர்கள் நேற்று முன்தினம் (21.06.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2025) திங்கட்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நவரத்தினம் தச்சுத்தொழிலகம்
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல் :
குடும்பத்தினர்
077 713 0872

(CS/ 58633) J-1

## முதலாம் ஆண்டு நினைவு நாள்



மலர்வு 19 . 09 . 1942

உதிர்வு 03 . 07 . 2024

திதி : ஆனி மாத அபரபட்ச திரயோதசி (23.06.2025)

### அமரர் இராசா - பரமானந்தம்

(இளைப்பாறிய P.W.D ஓவசியர்,
பழைய மாணவர், SDC, OBA முன்னாள் உறுப்பினர் -
யாழ் இந்து ஆரம்ப பாடசாலை, யாழ் இந்துக் கல்லூரி)


ஓராண்டு நகர்ந்தாலும்
ஓயவில்லை உங்கள் நினைவுகள்
அன்பால், பண்பால், நட்பால்
ஆளுமையால் எமையெல்லாம்
அரவணைத்து ஆளாக்கி வைத்தீர்கள்
இன்று உயிர் என்னும் ஒளி
நிழலாய் ஒளிர்ந்தாலும்
உணர்வில் மறையவில்லை

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்!

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS 58651) E

## மரண அறிவித்தல்



### திரு. இராசா பாலச்சந்திரன்

(யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஓய்வு பெற்ற விஞ்ஞான பாட ஆசிரியரும், இணுவில் எவரெஸ்ட் கல்வி நிறுவன முன்னாள் நிர்வாகியும், இணுவில் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா சபை முன்னாள் தலைவரும், இணுவில் அறிவாலய முன்னாள் தலைவரும்)

இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசா பாலச்சந்திரன் அவர்கள் (20.06.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான கண்மலர், நேசமலர், தனபாலசிங்கம், ஆகியோரினதும் மற்றும் கலாவல்லியின் அன்பு சகோதரனும், காலஞ்சென்றவர்களான மகேந்திரன், தங்கேஸ்வரன், ஆகியோரினதும் மற்றும் சண்முகமலர், சிவமதி, ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரசன்னா (லண்டன்), யாழினி (கொழும்பு), கோகுலன் (லண்டன்), பிரவீணா (ஆசிரியர் - யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்சினி (லண்டன்), சிவாஸ்கரன், (ஆசிரியர் - கொ/இராமநாதன் இந்து - மகளிர் கல்லூரி), ஜெனனி (லண்டன்), ஜெயகாந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேசசெயலகம் நல்லூர்), ஆகியோரின் அன்பு மாமனாரும், அக்ஷரன், அபிஷன், கேசிகன், ஆருக்சன், பானுஜன், அக்சிகா, கேசிகா, அர்த்தனா, கர்ஷனா, அவந்திகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2025) திங்கட்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


தோற்றம் 28.10.1949

மறைவு 20.06.2025

இரகுபதி வீதி,
2ம் குறுக்கு தெரு,
இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் கோவில் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. (ச-9)

# அரசு நினைத்தபடி செயலாற்றமுடியாது

*சாமர எம்.பி. தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 23

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் சிறைக்குள் தள்ளி எதிர்க்கட்சியே இல்லாமல் தேர்தல் நடத்துவதற்கு அரசு முயற்சிசெய்கிறது. இது சாத்தியமில்லை. இந்த விளையாட்டு எடுபடாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச அமைச்சர்கள் நீதிமன்றங்களை அவமதித்துவருகின்றனர். அவர்கள் தான் நீதிமன்றத் துக்கு உத்தரவு விடுவதுபோல் பேசுகிறார்கள்.

அரசுக்கு ஒரு நீதியும் எதிர்கட்சிக்கு இன்னொரு நீதியும் கொடுக்க முடியாது. நீதி எல்லோருக்கும் பொதுவாக இருக்கவேண்டும்.

இதனால் மக்களுக்கு எந்த நன்மையையும் கிடைக்கப்போவதில்லை. மின்கட்டணம் அதிகரித்து விட்டது. குறைப்பதாக வாக்குறுதி வழங்கிவிட்டு இப்போது கூட்டியுள்ளது.

பொய் மட்டுமே கூறுகிறது இந்த அரசு. எம்மை சிறையில் தள்ளுகிற விடயத்தில்தான் இந்த அரசு கவனம் செலுத்துகிறது. இவர்கள் நினைத்தபடி எம்மை சிறையில் தள்ளமுடியாது- என்றார். (ச-75)


## விற்பனைக்கு

LH 20 கயஸ் வாகனம் விற்பனைக்கு, மற்றும் எஞ்சின் கியர் பெட்டி விற்பனைக்கு.

இடம் - யாழ்ப்பாணம்

தொடர்பு: 077 005 0344

## வணிக கூட்டாளர் தேவை

முன்னணி மிக்சர் ரூ கிராம் நிறுவனத்தில் முதலீடு செய்ய ஒரு வணிக கூட்டாளரைத் தேடுகிறோம், இதன் மூலம் எங்கள் வணிகத்தை விரிவுபடுத்த முடியும்.

Benifits

- Director of bord
- Of Net profit magine Persentage.
- Long term benifits.
- Investment value between07ml to 10ml.

மேலும் விவரங்களுக்கு தயவுசெய்து தயங்காமல் தொடர்பு கொள்ளவும்: 077 511 0156


## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 09 . 1932



மறைவு 20 . 06 . 2025

### கந்தசாமி நாகேஸ்வரி

சிங்கப்பூரில் (அன்றைய மலாயா) முத்தையா - பரிபூரணம் தம்பதிகளின் இளைய மகளும், உடுவிலை சேர்ந்த காலம்சென்ற பொன்னுச்சாமி கந்தசாமி அவர்களின் மனைவியுமான நாகேஸ்வரி கடந்த (20.06.2025) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

ஏழு பிள்ளைகளின் தாயாரான நாகேஸ்வரி அவர்கள், பிரான்சில் 25 வருடங்களுக்கு மேலாக பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள் மற்றும் கொள்ளுப் பேர்த்தியான கலிசியா வரை அனைவருடனும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்திருந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் இறுதி கிரியைகள் எதிர்வரும் (24.06.2025) செவ்வாய்க்கிழமை காலை 08.00 தொடக்கம் 10.00 மணிவரை, யாழ்ப்பாணம், சுன்னாகத்திலுள்ள சூராவத்தையில் இடம்பெறும் என்பதை அறியத் தருகிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்கள் (உரோ 14.8)

மண்ணில் 20 . 03 . 1933



விண்ணில் 24 . 05 . 2025

### அமரர் குமாரசாமி திரேசம்மா


எங்கள் அன்புத் தெய்வத்தின் இயலாத காலத்தில் உதவியவர்கள், உறவினர்கள், அன்னாரின் மரணச் செய்தி கேட்டு அனுதாபம் தெரிவித்த அன்பர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்கள், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்கள் மற்றும் இறுதி நிகழ்வில் பங்கு பற்றி பல்வேறு வழிகளிலும் உதவி செய்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது சிரம் தாழ்த்திய நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

17/1, கச்சேரி நல்லூர் வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 . 06 . 1963



மறைவு 04 . 07 . 2024

### அமரர் ஆறுமுகம் கந்தசாமி

எம் பரம்பரையின் வழிகாட்டியாய்
மூன்று தசாப்தங்களில் எங்களை எல்லாம்
முன்னிலைப்படுத்தி தனக்காக வாழாது எமக்காக வாழ்ந்து
சந்ததி விருத்திக்காக ஆன்மீக வழி வாழ்ந்து
இறைவனடி சேர்ந்த எங்கள் அன்பு அப்பாவே !
உங்கள் உருவம் தான் இல்லை நீங்கள் விட்டுச் சென்ற
தடங்கள் எப்போதும் உணர்வூட்டுகின்றது.
ஓராண்டல்ல பல்லாண்டுகள் கழிந்தாலும் நினைவுகள்
நீங்காது எம் மனதில்..

மனைவி, பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி நிதியச் சேவை பரவலாக்கம் வரப்பிரசாதம்

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஜுன் 23**

**ஜனாதிபதி நிதியத்தின் சேவைகள் பிரதேச மட்டத்துக்கு பரவலாக்கப்பட்டமை எமது மாகாண மக்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதமாகும். இது முக்கியமான மைல் கல் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதிநிதியத்தின் சேவைகளை பிரதேச செயலக மட்டத்துக்கு விரிவாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் வடக்கு மாகாணத்துக்கான ஆரம்ப நிகழ்வு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போர்க்காலத்தில் 1991ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் மக்கள் மருத்துவத் தேவைக்காக கொழும்புக்கு அலையவேண்டும். அதுவும் இதற்கு விண்ணப்பித்து நீண்ட காலம் காத்திருக்கவேண்டும்.

இந்த அலைச்சல் வீண்செலவுகள் எல்லாம் இப்போது இல்லாமலாக்கப்பட்டிருக்கின்றன.

அரச சேவை என்பது மக்களுக்கு விரைவாகக் கிடைக்கப்பெறவேண்டியது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக அது மக்களுக்குக் கிடைக்கப்பெறுகின்றது.

மக்கள் தமது பிரதேச செயலகங்கள் ஊடாக விரைவாக தமக்குத் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்ளமுடியும். (ச-113)

# தமிழ்ப்பண்பாடு சர்வதேச மாநாடு தொடக்கவிழா யாழ். பல்கலையில்

யாழ்ப்பாணம், ஜீன் 23

சர்வதேச பண்பாட்டு ஆய்வு மையம், தஞ்சாவூர் தமிழ்நாடு திருநெறிய தமிழ் சைவசமய பாதுகாப்புப் பேரவை இலண்டன் தமிழ் கல்வியகம், இலண்டன் உலகச் செம்மொழித் தமிழ்ச்சங்கம், பிரான்சு இந்திய வம்சாவளி மக்களுக்கான அமைப்பு ஆகியன யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறையுடன் இணைந்து நடத்தும் தமிழ்ப்பண்பாடு அனைத்துலக மாநாடு தொடக்கவிழா எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணியளவில் யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி.சற்குணராசா, கௌரவ விருந்தினர்களாக இந்தியத்தூதரக துணைத்தூதுவர் எஸ்.சாய்முரளி, வடமாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன் ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர்.

தலைமையுரையை இந்துக் கற்கைகள் பீட பீடாதிபதி ச.பத்மநாபன், வரவேற்புரையை இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் திருமதி விக்னேஸ்வரி பவநேசன் ஆகியோர் நிகழ்த்துவர்.

இதன்போது இலண்டன் புதுயுகன் எழுதிய உலகத் தமிழ் இலக்கியமும் வாழ்வியலும், பிரான்சு ம.நவரத்னம் கணேஸ்வரன் எழுதிய தமிழ் எனும் சிறப்பின் தொகுப்பு எனும் இரு நூல்களின் வெளியீடும் இடம்பெறும். தொடர்ந்து மாலை 5 மணியளவில் கலை நிகழ்வுகள் இடம்பெறும். (ச-41)

# காரைநகரின் அபிவிருத்தி விரைவில் செயலுருப்பெறும்

## காரைநகர் உபதவிசாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 23

பொதுமக்களுக்கான தேவைகளைக் காலத்துக்கு காலம் கேட்டறிந்துகொள்வதற்காக நடமாடும் மக்கள் சந்திப்புகளை வட்டாரவாரியாக நடத்தித் தீர்வுகளை வழங்குவோம் என்று காரைநகர் பிரதேசசபையின் உபதவிசாளர் ஆண்டிஐயா விஜயராசா தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதேசத்தின் நீர் விநியோகம், கழிவுகள் சேகரிப்பு என்பவற்றை உரியமுறையில் கையாள்வதற்கான மூலோபாயங்களை வகுத்துக்கொண்டிருக்கிறோம்.

பொதுமக்களுக்கான தேவைகளைக் காலத்துக்குக் காலம் கேட்டறிந்துகொள்வதற்காக நடமாடும் மக்கள் சந்திப்புகளை நடத்துவோம்.

இந்தச் சந்திப்புகள் பொதுஅறிவித்தல் பலகையினூடாக அறிவிக்கப்படும்.

பிரதேசத்தின் அடிப்படைத்தேவைகளின் மறுசீரமைப்பு, உரிய கால வீதி செப்பனிடல்கள், வெள்ளநீர் வடிகாலமைப்பு, மீள்கட்டுமான உட்கட்டமைப்பு போன்ற தேவைப்பாடுகளுக்கு விரைவில் செயலுருக்கொடுக்கத் தயாராகவுள்ளோம்.

மேலும் குடிதண்ணீர் விநியோக அட்டவணை ஒன்று பின்பற்றப்படுவதற்கு மேலதிகமாக மக்களுக்கான அவசர குடிதண்ணீர் தேவைகளை நாளாந்தம் பூர்த்தி செய்வதற்கு ஏதுவாக பிரதேசசபையினால் உடனடி நீர் வழங்கல் முறைமை ஒன்று வட்டாரப் பிரதேச பாகுபாடின்றி மிக விரைவில் நடைமுறைக்கு வரவிருக்கிறது.

குடிதண்ணீர் விநியோகங்களில் ஏற்படும் முறைப்பாடுகளை கையாள்வதற்கான தனியான கட்டமைப்பும் செயற்படவிருக்கிறது - என்றார். (ச-125)



# சுற்றுச்சூழல் பாதுகாப்பு வலி. வடக்கில் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜுன் 23

வலிகாமம் வடக்கில் பாதீனியம் ஒழிப்பு, டெங்குத் தடுப்பு மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவம் ஆகியவை தொடர்பான கலந்துரையாடலொன்று வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் சபா மண்டபத்தில் பிரதேசசபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பிரதேச சனசமூக நிலையங்களை ஒன்றிணைத்து குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக ஆராயப்பட்டது. (ச-66)



# மயிலணி கந்தன் ஆலய மஹோற்சவம் ஆரம்பம்

*யாழ்ப்பாணம், ஜுன் 23*

சுன்னாகம் மயிலணிக் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து பன்னிரெண்டு தினங்கள் இவ் ஆலய மஹோற்சவப் பெருவிழா காலை, மாலை உற்சவங்களாக நடைபெறவுள்ளது. (ச-66)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

## வோல்கர்...

தப்படாது என்றும் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்தகால மனித உரிமை மீறல்களை கையாள்வது தொடர்பான நாட்டின் நல்லிணக்கத்துக்கான அர்ப்பணிப்புடனான நேர்மையை வெளிப்படுத்துவதற்கு அரசாங்கம் விரும்புகின்றது. மனித உரிமை ஆணை

யாளர் மக்களை சந்திப்பதற்கும் அனைத்து இடங்களுக்கும் செல்வதற்கும் தடை எதுவும் விதிக்கப்படாது - என்றார். (அ-எ-26)

## யாழ்ப்பாணத்தில்...

பாதிப்படைந்தது. சில மணிநேரம் நீடித்த மழையால் பல இடங்களில் மின் தடையும் ஏற்பட்டது. பலத்த காற்றால் பொன்னாலைப் பகுதியில் தென்னை மரம் ஒன்று முறிந்து மின் வடத்தின் மீது வீழ்ந்தது. (அ-எ-26-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவுக்குத்...

பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற கொலை, கொள்ளை, வாள்வெட்டுப் போன்ற பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்று தெரிவிக்கப் படுகின்றது. இவர்களுக்கு எதிராக 15 பிடியாணைகளும் நீதிமன்றங்களால் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.
இவர்கள் மூவரும் தலைமன்னாரில் இருந்து படகுமூலம் சட்டவிரோதமாக இந்தியாவுக்குத் தப்பிச்செல்ல முயன்ற போது கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உதவிய குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
கைதுசெய்யப்பட்டவர்கள் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மூலம் சந்தேகநபர்களை நாளைமறுதினம் புதன்கிழமை யாழ்ப்பாணம் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-எ-26)

## இன்று...

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோரைச் சந்திக்கவுள்ளார்.
வெளிவிவகார அமைச்சர், நீதி அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், மதத் தலைவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகிய தரப்புகளுடனும் வோல்கர் டேர்க் கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார்.
கண்டிக்குச் செல்லவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் புனித தலதாமாளிகையில் வழிபாடுகளில் ஈடுபடுவார். அஸ்கிரி மற்றும் மல்வத்து பீடங்களின் தலைமைப் பீடாதிபதிகளையும் சந்திப்பார்.
யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலைக்கும் வரவுள்ள ஆணையாளர், மாகாண ஆளுநர்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவார் என்று வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.
அதேவேளை, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களையும் அவர் வடக்குக் வரும்போது சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.
ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் ஒருவர் ஒன்பது வருடங்களின் பின்னர் இலங்கைக்கு வரும் சந்தர்ப்பம் இதுவாகும். 2016ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அப்போதைய ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயித் ராத் அல் ஹூசைன் இலங்கைக்கு வந்திருந்தார். வோல்கர் டேர்க்குக்கு முன்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளராகப் பணியாற்றிய மிச்செல் பச்செலெட் இலங்கைக்கு வர விருப்பம் தெரிவித்திருந்தபோதும் அது சாத்தியமாகவில்லை.
ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் போர்க்கால உரிமை மீறல்கள் தொடர்பான ஆதாரங்களை சேகரிப்பதற்காக இலங்கை பொறுப்புக்கூறல் திட்டத்தை உருவாக்கியுள்ளபோதும், இலங்கை அதற்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டுவருகின்றது. இந்தநிலையில் தற்போதைய ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க்கின் இலங்கை வருகை அதிக அவதானிப்பைப் பெற்றிருக்கின்றது.

இலங்கையின் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் வெளியிட்ட அறிக்கையில் புதிதாகத் தெரிவுசெய்யப்படும் அரசாங்கம் இனமோதலுக்கான அடிப்படைக் காரணங்களுக்குத் தீர்வைக் காணவேண்டும் என வோல்கர் டேர்க் வலியுறுத்தியிருந்தார்.
பொறுப்புக்கூறலில் காணப்படும் இடைவெளியை நிரப்புவதற்கும் நல்லிணக்கத்தை நோக்கி முன்னேறுவதற்கும் அரசாங்கம் அடிப்படை அரசமைப்பு நிறுவன ரீதியான மாற்றங்களை முன்வைக்கவேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பயன்படுத்துவதை உடனடியாக நிறுத்தவேண்டும் என்ற பரிந்துரையையும் அவர் முன்வைத்திருந்தார். (அ-எ-44)

## சாவகச்சேரி...

கான தவிசாளர், உபதவிசாளர் தெரிவு உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
28 உறுப்பினர்களைக் கொண்ட சாவகச்சேரி பிரதேசசபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 8 உறுப்பினர்களையும், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் 7 உறுப்பினர்களையும், தேசிய மக்கள் சக்தி 6 உறுப்பினர்களையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி 5 உறுப்பினர்களையும், ஈ.பி.டி.பி. மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி என்பன தலா ஒரு உறுப்பினர்களையும் கொண்டுள்ளன.
இந்தப் பிரதேசசபையில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் மற்றும் ஜனநாயகதமிழ்த்தேசியக்கூட்டணி இணைந்து ஆட்சியைக் கைப்பற்றும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-எ-26)

## காணி...

வரும் 25ஆம் திகதிவரை தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுமக்களின் 2 ஆயிரத்து 400 ஏக்கர் காணிகளை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் வலியுறுத்திவருகின்றனர். (அ-எ-26)

## ஈரான்...

இஸ்பஹான் பகுதிகளில் செயற்பட்ட அணு உலைகள் மீதே தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. ஈரானின் அணுகுண்டுச் செயற்றிட்டத்தில் 90 வீதமான பங்களிப்பை வழங்கிவரும் போர்டோ அணு உலை தாக்கப்பட்டுள்ளமை பதற்றங்களையும், அணுக்கதிர்வீச்சுத் தாக்கம் ஏற்படலாம் என்ற ஐயப்பாடுகளையும் உருவாக்கியுள்ளது.
அமெரிக்காவின் தாக்குதலுக்குப் பரந்துபட்ட பதிலடி வழங்கப்படும் என்று ஈரானிய இராணுவம் அறிவித்துள்ளதுடன், இஸ்ரேலின் வர்த்தக நகரமான டெல் அவிவ் மீது சரமாரியான ஏவுகணைத் தாக்குதல்களையும் மேற்கொண்டுவருகின்றது. 'ஒவ்வொரு மணிநேரமும் குறைந்தது ஐந்து அல்லது ஆறு ஏவுகணைகள் டெல் அவிவ் மீது கணிசமான சேதத்தை ஏற்படுத்துகின்றன' என்று சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.
இதற்கிடையே அமெரிக்காவின் தாக்குதல்களுக்கு வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளதுடன், ஈரானுக்கு அணுவாயுதங்களை வழங்கவும், ஈரானுடன் இராணுவக் கூட்டணியை அமைக்கவும் வடகொரியாவில் உயர்மட்டக் கலந்துரையாடல் இடம்பெற்று வருகின்றது என்று கூறியுள்ளனர்.
ரஷ்ய அதிபர் புடின், சீன அதிபர் ஜின்பிங் ஆகியோரும் அமெரிக்காவைக் கடுமையாகக் கண்டித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## கிணற்றில்...

சேர்ந்த கிருபாமூர்த்தி கலா (வயது-55) என்ற குடும்பப் பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
நேற்றுமுன்தினம் இரவு உணவருந்தி விட்டு உறக்கத்துக்குச் சென்ற இவரைக் காலையில் காணவில்லை என்றும், அவரைத் தேடியபோது கிணற்றில் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டன. (அ-எ-26)

## அணையா...

இந்தப் போராட்டத்துக்கு அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளதுடன், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை வரவுள்ள நிலையில், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியை வலியுறுத்திய ஒற்றுமையான கவனவீர்ப்பு முக்கியமானது என்றும் அவை சுட்டிக்காட்டியுள்ளன. இந்தப் போராட்டத்தில் பொதுமக்களும் கலந்துகொண்டு போராட்டத்துக்கு வலுச்சேர்க்கவேண்டும் என்றும் அவை வேண்டுகோள் விடுத்துள்ளன.
காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியை வலியுறுத்திய இந்த கவனவீர்ப்பு மிக முக்கியமானது என்பதும் சுட்டிக்காட் டப்படுகின்றது.
செம்மணிப் புதைகுழிக்கு நீதிகோரியும், சர்வதேச கண்காணிப்புடன் மனிதப் புதைகுழி அகழ்வை முன்னெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் "மக்கள் செயல்" என்ற தன்னார்வ இளையோர் அமைப்பு வெகுசனப்போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.
இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் புதன்கிழமைவரை இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த மூன்று தினங்களில் முதல் இரண்டு தினங்களில் சுழற்சிமுறை யான உணவு தவிர்ப்புப் போராட்டமும், செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பான செய்திக் கண்காட்சியும், நாடக ஆற்றுகையும் நடைபெறும்.
மூன்றாம் நாளான 25ஆம் திகதி பெரும் கவனவீர்ப்புப்போராட்டம் முன்னெடுக்கப்படும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டேர்க் யாழ்ப்பாணம் வரவுள்ள நிலையில் அவரது கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.
இந்தப் போராட்டத்துக்கு அரசியல் கட்சிகளும், சிவில் அமைப்புக்களும், பொது அமைப்புக்களும், யாழ். பல்கலைக்கழக சமூகமும் ஆதரவு தெரிவித்துள்ளன.

**தமிழரசுக் கட்சி அழைப்பு**

"அணையா விளக்கு" பொதுசனப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் போராட்டத்தின் இரண்டாம் நாளான 24 ஆம் திகதி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் அனைவரும் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை போராட்டத்தில் கலந்துகொள்ளவேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் அழைப்பு விடுத்துள்ளார். (அ-எ-26)


**காணி விற்பனைக்கு**

* மீசாலையில் 4 பரப்பு காணி விற்பனைக்கு.
* சுன்னாகம் - பொக்கனை நாகதம்பிரான் வீதியில் 2 பரப்பு காணி விற்பனைக்கு.

**077 794 8012**

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம், 1 ஏக்கர் 15 இலட்சம்.

தொடர்பு:-
Whatsapp:- **0044 740 537 3526**

(CS 58593) J-1


## மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 04 . 1956



மறைவு 22 . 06 . 2025

### தம்பிப்பிள்ளை திருநாதன்

(ஓய்வு பெற்ற மின்சாரசபை ஊழியர்)

தொல்புரம் மத்தியை பிறப்பிடமாகவும் கோவில் வீதி நாவாந்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை திருநாதன் அவர்கள் நேற்று (22.06.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 23.06.2025 திங்கட்கிழமை 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி மத்திய மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 58654) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சண்முகராசா உலகநாதன் (சுந்தரலிங்கம்)

## (Technical officer manner)



வேலணை மேற்கை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி, லண்டனை வசிப்பிடமாகவும், கொண்ட சண்முகராசா உலகநாதன் அவர்கள் 18.06.2025 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகராசா - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - நாகபூசணி தம்பதியரின் மருமகனும், தனலச்சுமியின் (U.K) அன்புக் கணவரும், சிவகுருநாதன் (Engineer, Australia), காலஞ்சென்றவர்களான இலங்கைநாதன் (அன்னராஜா ஸ்ரோர்ஸ்), நல்லைநாதன் (Lawyer) ஆகியோரின் அன்புச்சகோதரரும், மனோகரி (Australia), அன்னலட்சுமி (யாழ்ப்பாணம்), சித்திராதேவி (கனடா) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற மாணிக்கசிங்கம் (U.K) மற்றும் பாலசிங்கம் (U.K), விநாயகமூர்த்தி (அப்பு, துர்க்கா ரெக்ஸ் யாழ்ப்பாணம்), யோகலக்சுமி (U.K), ஜெயசுதந்தி (U.K), காலஞ்சென்ற ஜெயதேவி (U.K) மற்றும் ஜெயதேவன் (U.K), ஜெயகுமாரி (U.K) ஆகியோரின் மைத்துனரும், காலஞ் சென்றவர்களான பூமணி, ஜெயகௌரி மற்றும் சுகந்தி, தேவன்இளங்கோ, சிவானந்தன், மதிவதனி, ரவீந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.06.2025 வியாழக்கிழமை லண்டனில் நடைபெறவுள்ளது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்**
**மனைவி (U.K)**

**பிறப்பு 15.02.1948**

**இறப்பு 18.06.2025**


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 அம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org